வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். STC 5/2023

வழக்கு சாட்சி PW1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பிரேம்குமார் | ஜாதி | |
| கணவர்/தந்தை | பாக்கியராஜா | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 40 |

தேதி 14.03.2025

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**குறுக்கு விசாரணை**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் B.Tech, நான் எங்கு உள்ளேன் என்றால் பெங்களூரில் உள்ளேன். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் டாடா நிறுவனத்தில் மாத சம்பளத்திற்கு வேலை பார்க்கிறேன். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் பேட்டரி நிறுவனத்தில் வேலை செய்கிறேன். வருமானவரி செலுத்துகிறேனா என்றால் செலுத்துகிறேன். முரளி எப்படி தெரியும் என்றால் எனது நண்பரின் நண்பர். முரளி எப்போது தெரியும் என்றால் 2018. எனக்கு சொந்த வீடு உள்ளதா என்றால் மாதவரம் பால்பண்ணையில் உள்ளது. நான் 2018ல் எங்கு வேலை பார்த்தேன் என்றால் மறைமலைநகர் போர்டு நிறுவனத்தில். 2018ல் எனது மாத வருமானம் எவ்வளவு என்றால் ரூ. 1 லட்சம். வருடத்திற்கு 14 லட்சம் போனஸ் சேர்த்து. எதன் அடிப்படையில் நான் கடன் அளித்தேன் என்றால் நண்பர் என்ற அடிப்படையில் தொழிலை விரிவுபடுத்துவதற்காக கொடுத்தேன். முரளி என்ன தொழில் செய்கிறார் என்றால் காரை வாங்கி விற்பனை செய்யும் நிறுவனம் வைத்துள்ளார். நான் முரளிக்கு பணம் கொடுக்கவில்லை என்றாலும் அவரது நிறுவனத்தில் ஒரு பங்குதாரராக சேர்ந்தேன் என்றால் இல்லை. நான் கடன் கொடுப்பதற்கு லைசன்ஸ் அரசாங்கத்திடம் பெற்றுள்ளேனா என்றால் இல்லை. நான் கடனாகத்தான் கொடுத்தேன். நான் எனது வருமானவரியில் முரளிக்கு அளித்த கடனினை கூறியுள்ளேனா என்றால் இல்லை. நான் கடன் பெற்றுதான் அவருக்கு அளித்தேன். மேற்படி கடன் பெற்றதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியுமா என்றால் முடியும். எந்த தேதியில் நான் கடன் அளித்தேன் என்றால் 20.08.2019, 25.09.2019, 25.11.2019 அளித்தேன். எந்த வங்கியில் அனுப்பினேன் என்றால் முரளியின் ஜவகர் நகர் HDFC வங்கி கிளைக்கு அனுப்பினேன். நான் என்ன கடன் வாங்கினேன் என்றால் பஜாஜ் இன்ஸ்டன்

லோன். எனது பெயரில்தான் நான் கடன் வாங்கினேன் என்றால் ஆமாம். நான் எனது வருமானவரியில் முரளிக்கு கடன் அளித்ததை கூறியுள்ளேன் என்றால் ஆமாம். முரளி எப்போது காசோலை அளித்தார் என்றால் 05.11.2022 அன்று அளித்தார். ம.சா.ஆ.3 எப்போது ஏற்படுத்தப்பட்டது என்றால் 20.10.2021. அதன் அசல் எங்கு உள்ளது என்றால் நீதிமன்றத்தில். அதனை யார் எழுதியது என்றால் வழக்கறிஞரை வைத்து நான் எழுதினேன். அதில் நான் முரளியிடம் கையொப்பம் பெற்றேன். ம.சா.ஆ.3ல் காசோலை எண் ஆனது குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். ம.சா.ஆ.3ல்பக்கம் இரண்டில் மேற்படி வழக்கு காசோலையானது என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். ம.சா.ஆ.3 நான் தயார் செய்தது என்றாலும் அதில் நான் முரளியிடம் கையொப்பம் பெற்றேன் என்றாலும் ஆமாம். நான் காசோலை பெற்றபின்புதான் முரளியிடம் கையொப்பம் பெற்றேன் என்றால் இல்லை. முரளி அதன்பின்புதான் கொடுத்தார். முரளி 8 லட்சம் ரூபாயை கொடுத்துவிட்டார் என்றாலும் முரளி ம.சா.ஆ.3னை ரத்து செய்யாததால்தான் நான் காசோலையை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. காசோலையில் யார் கையொப்பம் செய்தார்கள் என்றால் முரளி. காசோலையை அளிக்கும்போது கிராஸ் செய்தார் என்றால் இல்லை. என்னிடம் காசோலையை சூரட்டிக்காக அளித்தார் என்றால் இல்லை.

**மறுவிசாரணை இல்லை.**